2. தேவைப்படும் பொழுது மட்டும் பொருள்கள் வாங்க தேவைப்படும் அளவிற்கு வங்கியிலிருந்து தொகை எடுக்கப்பட வேண்டும். கூடுதலாக தொகை எடுக்கப்பட்டு நெடுநாட்களுக்கு தலைமையாசிரியர் கையிருப்பில் வைத்திருத்தல் கூடாது.

3. பொருள்கள் வாங்கியமைக்கான பற்றுச்சீட்டுகள் (Vouchers) பெறப்பட்டு வரிசையாக பத்திரமாக பராமரிக்கப்பட வேண்டும். ஒரு செலவினம் ரு. 5000/– க்குமேல் இருந்தால், அத்தகைய பற்றுச் சீட்டுகளுக்கு Tin நம்பர் அவசியமானதாகும்.

4. தொகை பெறப்பட்டமை மற்றும் செலவு செய்யப்பட்டமை ரொக்கப் பதிவேட்டில் (Cash book) விபரங்களை பதிவு செய்வதுடன், ஒவ்வொரு மாதக் கடைசியிலும் ரொக்கப்பதிவேடு Abstract–இல் தலைமை ஆசிரியர் கையொப்பமிடவேண்டும்.

5. பொருள்களின் விவரங்களை இருப்புப் பதிவேட்டில் (Stock Register) பதிவு செய்தல் வேண்டும். இருப்புப் பதிவேட்டு பக்க எண் பற்று சீட்டில் பதியப்படவேண்டும். ஒவ்வொரு பதிவிலும் தலைமை ஆசிரியர் கையொப்பமிட வேண்டும்.

மேலும் ஒருங்கிணைந்த பள்ளி மானியத் தொகையினை இச்சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள செயல்பாடுகளை தவிர வேறு எந்த செயல்பாடுகளுக்கும் பயன்படுத்தாமல் உரிய காலத்திற்குள் பயன்படுத்த அனைத்து பள்ளிகளுக்கும் அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு

மாவட்டம் வாரியாக நிதி விடுவிக்கப்பட்ட விவரப்பட்டியல்

மாநிலத் திட்ட இயக்குநர்

28.11.18

28/11/2018

பெறுநர் :

அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள்

ந.க. எண். 60/அ.க.க/ 2018 நாள் 5-12-18

அனைத்து அரசு தலைமை ஆசிரியர்களும் மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகளை நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது.



5-12-18

Chief Educational Officer,
Vellore - 632 009.